திரு. சி. பழனிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, பெத்தநாயக்கன் பாளையம் பேரூராட்சியிலுள்ள ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளில் 3 பழுதடைந்து பல மாதங்களாகிவிட்டன. அவைகளைப் பழுதுபார்க்க வேண்டுமென்று ஆழ்துளை குழாய்க் கிணறு மேலாளரிடம் கூறினோம். ஆனால், அவர் பழுதுபார்க்கவில்லை. பேரூராட்சியே பழுதுபார்க்க வேண்டு மென்று அமைச்சர் கூறி உள்ளார்கள். ஊராட்சிகளுக்குப் பழுதுபார்ப்பதைப் போல், பேரூராட்சிகளுக்கும் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பழுது பார்க்க வேண்டுமென்கிறேன். பேரூராட்சி ஊழியர்களால் அதனைப் பழுது பார்க்கும் வேலையைச் செய்ய முடியாது. ஆகவே, ஆழ்துளை குழாய்க் கிணறுகளைச் செய்கின்ற நிறுவுகின்ற குடிநீர் வடிகால் வாரியமே பழுது பார்த்து கொடுத்தால் அதற்கான கட்டணத்தை நாங்கள் செலுத்துகிறோம். அதை உடனடியாகச் செய்ய வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் கூறிய ஆலோசனை அரசால் பரிசீலிக்கப்படும். இப்பொழுது பழுதுபார்க்க வேண்டு மென்று அரசு கேட்டுக்கொண்டுள்ளது என்று சொல்லியுள்ளேன். விரைவில் அவை சீர்செய்யப்படும் என்று கூறி உள்ளேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்தி அடைவார்கள் என்று கருதுகிறேன்.

[முற்பகல் 10-00]

(இ) சின்னசேலம் பேரூராட்சியில் குடிநீர் தட்டுப்பாடு குறித்து.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

"தென்னாற்காடு மாவட்டம் சின்னசேலம் பேரூராட்சியில் குடிநீர்த் தட்டுப்பாட்டினால் எழுந்துள்ள பதட்டநிலை குறித்து."

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, தென் னாற்காடு மாவட்டம் சின்னசேலம் பேரூராட்சிக்கு குடிநீர் வடிகால் வாரியத் திட்டம் பற்றி விரிவான ஆய்வு செய்யப்படுகிறது. கோமுகி நதி அணையி லிருந்து தண்ணீர் கொண்டு வரக்கூடிய சாத்தியக்கூறுகளும் மற்றும் பொருளாதார வசதி பற்றி விரிவாக ஆராய்ந்து திட்டம் தயாரித்த பின்னர் முறைப்படி அரசு ஆட்சி ஒப்புதல் (administrative approval) வழங்கப்படும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சின்ன சேலம் நகரத்திற்கு கோமுகி நதியிலிருந்து தண்ணீர் கொண்டுவரப்படுவதாக உள்ளதா அல்லது மணிமுத்தாறு பகுதியிலிருந்து தண்ணீர் கொண்டுவரப்

படுவதாக உள்ளதா? கோமுகி நதியிலிருந்து கொண்டு வருவதற்கு சாத்தியக் கூறுகள் அதிகமாக உள்ளதாகத் தெரிகிறது. எனவே கள்ளக்குறிச்சி, சின்னசேலம் ஆகியவற்றை ஒருங்கிணைத்த நிலையில் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு கொண்டுவரப்படுமா அல்லது தனித்தனியாக போடப்படுகிறதா? கொண்டுவருவதை மிக விரைவில் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, கோமுகி நதி அணையிலிருந்து அல்லது மணிமுத்தாறு நதி அணையிலிருந்து தண்ணீர் கொண்டுவரக்கூடிய சாத்தியக்கூறுகளும், மற்றும் பொருளாதார வசதி பற்றி விரிவாக ஆராய்ந்து முடித்த பின்னர்தான் திட்டம் தயாரிக்க விருக்கிறது. இப்பொழுது தண்ணீர் கொண்டுவரப்படுவதில் மிக எச்சரிக்கை யாக இருக்க வேண்டியிருப்பதால் சற்று காலதாமதம் ஆகிறது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு திருப்தி அளிக்கும் வகையில் விரைவில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று அறிவிக்கிறேன்.

(ஈ) நாகூர் பகுதியில் டீசல் தட்டுப்பாடும், மீன்பிடி படகுகள் செயல் படாமையும் குறித்து.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"நாகப்பட்டினம், நாகூர் பகுதியில் கடுமையான டீசல் தட்டுப் பாட்டினால் 200 மீன்பிடி படகுகள் செயல்படாமல் மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து."

மாண்புமிகு திரு. க. உரொ எட்மண்ட்: நாகப்பட்டினத்திலுள்ள பெட்ரோல் நிலையங்களுக்கு சென்னை மற்றும் நெய்வேலி நகரங்களிலிருந்து டீசல் எண்ணெய் விநியோகிக்கப்படுகிறது. ஏப்ரல் மாதம் முதல் ஜூலை மாதம் வரையில் மீன்பிடித் தொழிலுக்கு முக்கிய காலம் ஆகும். கடலூர் பகுதியிலிருந்து வரும் படகுகள் உட்பட ஏறக்குறைய 120 முதல் 150 விசைப் படகுகள் நாகப்பட்டினம் பகுதியில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுடைய ஒரு நாளைய டீசல் எண்ணெயின் தேவை அளவு 12 கி. லிட்டர்கள் ஆகும். சென்ற மார்ச்சு மாதம் பெட்ரோல் நிலையத்தினர் சாதாரணமாக தாங்கள் பெறும் 400 கிலோ லிட்டருக்கு பதிலாக 290 கிலோ லிட்டர்களையே பெற்றனர். ஒரு நாளைய தேவை 13 கிலோ லிட்டர் என்று இருக்க, நாள் ஒன்றுக்கு சராசரி 9 கிலோ லிட்டர்களே கிடைக்கப்பெற்றன.